
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1170**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**59**

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

சிறுபான்மையின கல்வி நிறுவனங்களை அச்சுறுத்தும் இந்தக் காலகட்டத்தில், திராவிட மாடல் அரசு அவர்களுக்கு எந்த வகையில் எல்லாம் துணை நின்றது என்பதைப் புரிந்துகொள்வது இந்தத் தேர்தல் காலத்தில் மிகப் பொருத்தமானதும் அவசியமானதும்கூட.

### நிரந்தர தகுதிச்சான்று

சிறுபான்மையின கல்வி நிறுவனங்களை அச்சுறுத்தி, நெருக்கடிக்கு உள்ளாக்கி, அவற்றை இழுத்து மூட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் முயற்சிகள் நடைபெறும் சூழலில், அதற்கு நேர்மாறாகச் சிறுபான்மையின கல்வி நிறுவனங்களின் இயக்கத்தை எளிமை யாக்கும் முன்னெடுப்புகளைச் செய்திருக்கிறது திராவிட மாடல் அரசு. பொதுவாக, சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழ் 3 அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டிய கட்டாயம் இருந்தது. ஒவ்வொரு முறை புதுப்பிக்கும்போதும், அந்த நிறுவனத்தில் பயிலும் சிறுபான்மையின மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களின் விவரங்களை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும். புதுப்பித்தல் விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கும்போது, அந்த நிறுவனங்கள் சில அரசின் சலுகைகளைப் பெறுவதில் சிக்கல்கள் நீடித்தன.

இந்த விதிகளைத் திருத்தி, சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு ஒரேயொரு முறை மட்டுமே பெறக்கூடிய வகையில் நிரந்தர சான்று வழங்க வேண்டுமென்பது அந்நிறுவனங்களின் நீண்டகால கோரிக்கை. 2024-ஆம் ஆண்டில் இதற்குச் செவிமடுத்த திராவிட மாடல் அரசு, அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றிட ஆணை பிறப்பித்தது. அதன்படி, 2026 பிப்ரவரி வரை தமிழ்நாட்டில் 370 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழும், 56 கல்வி நிறுவனங்களுக்கு மொழிவழி சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளன. இதுதவிர, 314 நிறுவனங்களுக்கு மதச்சார்பு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சான்றிதழைப் பெற ஆன்லைனிலேயே மிக எளிமையாக விண்ணப்பிக்கும் வசதியையும் திராவிட மாடல் அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆனால், ஒன்றிய அரசோ 2014 முதல் இது வரை சுமார் 20,000 கிறிஸ்தவ நிறுவனங்களுக்கான உரிமங்களை ரத்து செய்துள்ளது.

### நிறுவனங்களும் நலத்திட்டங்களும்

உலகமே உற்று நோக்கி வியக்கும் வண்ணம் திராவிட மாடல் அரசால் செயல்படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டம், தமிழ்நாடு முழுவதும் 1,545 தொடக்கப் பள்ளிகளில் ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 95 மாணவ - மாணவிகளுக்குப் பள்ளிகளில் வழங்கப்படுகிறது. இதில் அரசு ஆதரவுடன் இயங்கும் சிறுபான்மையின கல்வி நிறுவனங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. திராவிட மாடல் அரசின் 2.0 ஆட்சியில், இந்தத் திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கப்படும் என்ற இனிப்பான செய்தி யையும் வாக்குறுதியாகத் தந்திருக்கிறார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அதனால், மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து சிறுபான்மையின பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் கூடுதல் பலன் பெறவிருக்கின்றனர்.

2021-ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில், ‘காலை உணவு’ என்ற திட்டம் இல்லை. ஆனால், சொல்லாததையும் செய்துகாட்டி, அதிலும் சமூக நீதிக் கண்ணோட்டத்தில் சாதனையைப் பதித்தார் நமது திராவிட மாடல் நாயகர். அதே போல சொல்லாமல் செய்த மற்ற இரண்டு திட்டங்கள், ‘தமிழ்ப்புதல்வன்’, ‘புதுமைப்பெண்’. இந்த இரண்டு திட்டங்களின் ஊடாக 12 இலட்சத்திற்கும் அதிகமான மாணவ - மாணவிகள் மாதந்தோறும் 1,000 ரூபாய் தற்போது பெற்று வருகின்றனர். 2.0 ஆட்சியில், இத்திட்டத்தின் கீழ் மாணவ - மாணவிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை 1,500 ரூபாயாக உயர்த்தப்போவதாகத் தேர்தல் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களிலும் அரசு ஆதரவில் இயங்கும் சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இதெல்லாம் எந்தக் காலகட்டத்தில் நடக்கிறது என்பது மிக முக்கியமானது. வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறை திருத்தச் சட்டம் 2026-ஐ சில நாட்களுக்கு முன் ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்றியது. வெளிநாட்டு நிதி முறைகேடுகளைத் தடுக்கவும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவரவுமே இச்சட்டம் என்று ஒன்றிய அரசு கூறுகிறது. ஆனால், கிறிஸ்தவ நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகளை நிறுத்தவே இந்த முயற்சி என்பதைக் கல்வியாளர்கள் கண்டித்திருக்கிறார்கள். கழகமும் கண்டித் துள்ளது. கிறிஸ்தவ நிறுவனங்கள் மற்றும் சிறுபான்மையினர் நடத்தும் அறக்கட்டளை களை நேரடியாகக் குறிவைக்கும் இச்சட்டத்தைக் கைவிட வேண்டுமென்று, ஒன்றிய அரசுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

### தேவாலயங்களைக் காக்கும் கழகம்

சிறுபான்மையின கல்வி நிறுவனங்களை மட்டும் இந்த அரசு காக்கவில்லை. தேவாலயங் களைக் காக்கவும் சீரமைக்கவும் ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்குகிறது திராவிட மாடல் அரசு. மதம் மாறிய தலித் கிறிஸ்தவர் களுக்கு இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது என்று வடக்கே வலதுசாரிகள் வாதங்களைத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், அவர்களுக்கு இட ஒதுக்கீடு தந்தே தீர வேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறது தி.மு.கழகம். ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்லறைத் தோட்டங்கள் அமைக்க, 5 ஏக்கர் நிலம் ஒதுக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜெருசலேம் செல்ல, ஆண்டுக்கு 600 பேருக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. தேவாலயப் பணியாளர்களுக்கு நலவாரியம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. எல்லா வற்றுக்கும் மேலாக, 2025-ஆம் ஆண்டு ஏப்ரலில் போப் ஃபிரான்சிஸ் மறைந்தபோது, வெறும் இரங்கல் அறிக்கையோடு நின்று விடாமல், தமிழ்நாடு அரசின் சார்பில் பிரதி நிதிகளை அனுப்பிவைத்து, மரியாதை செலுத் தினார் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதைக் காலம் மறவாது, கிறிஸ்தவர்களும் என்றும் மறக்க மாட்டார்கள்.

...நீளும்



# கிறிஸ்தவர்களின் தோளோடு தோளாக...

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு-30 அனைத்து மத மற்றும் மொழி சிறுபான்மை யினரும் கல்வி நிறுவனங்களை நடத்த அனுமதி வழங்குகிறது. இந்தியா முழுவதும் சுமார் 50,000 கிறிஸ்தவ நிறுவனங்கள் கல்விச் சேவையில் ஈடுபட்டிருக்கின்றன. 150 ஆண்டு களுக்கும் மேலாக இயங்கும் கிறிஸ்தவப் பள்ளி - கல்லூரிகளும் இவற்றில் உண்டு. ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமைகளுக்காகப் பங்காற்றியதில் இந்த கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களின் சேவைகள் ஈடு இணையற்றவை. ஆனால், கடந்த 12 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சியில் இவை கடும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன.

மதமாற்றத்தில் ஈடுபடுகிறார்கள் என்று குற்றம் சாட்டுவது, மாற்று மதத்தின் கடவுள் சிலைகளை வைக்க முயல்வது, இறை வாழ்த்துப் பாடல்களைப் பாடக் கூடாது என எதிர்ப்பது என வடமாநிலங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்து சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு எதிராக வும் வன்முறைச் செயல்கள் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றன. அந்தச் சூழ்ச்சிகள் எதுவும் எடுபடாமல்போன மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். அந்தப் புரிதலுக்கு முழுமுதல் காரணமானது திராவிட இயக்கம்.

அறிவியல் முறையிலான ‘மெக்காலே கல்வி முறை’யை இறுகப் பற்றிக்கொள்ள, மக்கள் மத்தியில் வலியுறுத்திக்கொண்டே இருந்தது திராவிட இயக்கம். அந்த வழியில், திராவிட முன்னேற்றக் கழகமும் சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது முதல் ஆபத்துக் காலங்களில் துணைநிற்பது வரை உற்றத் தோழனாகத் துணை நின்றிருக்கிறது. வரலாற்றில் பின்னோக்கிச் சென்றால், தனி நூலே எழுதும் அளவுக்கு எண்ணற்ற சம்பவங்கள் நிறைந்திருக்கின்றன. ஆனால், இன எதிரிகள்

> **தேவாலயப் பணியாளர்களுக்கு நலவாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.**

## எதிர்பார்த்ததைவிட மோசமான மறுவரையறை!

தொகுதி மறுவரையறையின் மூலம், தென் மாநிலங்களை வஞ்சிக்க ஒன்றிய அரசு முயல்கிறது எனக் கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலேயே எதிர்ப்பு தெரிவித்து, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் குறையக் கூடாது என தி.மு.கழகம் எச்சரிக்கை செய்தது. ‘அப்படியொரு முயற்சியையே ஒன்றிய அரசு மேற்கொள்ளவே இல்லை. தி.மு.க. அரசியலுக்காக இதைக் கையிலெடுக்கிறது’ என பா.ஜ.க.வும் அதன் அடிமை அ.தி.மு.க.வும் வாய் கூசாமல் பொய் கூறின. ஆனால் இன்றோ, மக்களவை இடங்களை மறுவரையறை செய்வதற்கான மசோதாவை அறிமுகப்படுத்த சிறப்புக் கூட்டத்தொடரை அறிவித்திருக்கிறது ஒன்றிய அரசு.

இதன்படி, 543-லிருந்து 850-ஆக இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயல்கிறது ஒன்றிய அரசு. இதில் எதிர்பார்த்ததைவிட மிக மோசமான அம்சங்கள் இருப்பதாக, சமூக செயல்பாட்டாளர் யோகேந்திர யாதவ் எச்சரித்துள்ளார். “மாநிலங்களுக்கான இடங்களை முழுமையாக மறு ஒதுக்கீடு செய்வதற்கும் தொகுதி எல்லைகளை முறைகேடாக வரையறுப்பதற்கும் வழிவகுக்கிறது இந்த மசோதா. எதிர்பார்த்தபடியே, பெண்களின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துகிறோம் என்ற பெயரில், இதைக் கொண்டுவருகிறார்கள். பிரதமர் மற்றும் அமைச்சர்களின் உறுதிமொழிக்கு மாறாக, ஒவ்வொரு மாநிலத்திற்குமான தற்போதைய இடங்களின் விகிதாச்சாரம் பராமரிக்கப்படும் என்பதை உறுதிசெய்ய இந்த மசோதாவில் எதுவும் இல்லை.

இதைவிட மோசமாக, மறு ஒதுக்கீட்டிற்கு எந்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையாக இருக்கும் என்ற முடிவு அரசியலமைப்பிலிருந்து நீக்கப்பட்டு, சட்டத்தின் அதிகார வரம்பிற்குள் வைக்கப்பட்டுள்ளது. அதாவது, நாடாளுமன்றப் பெரும்பான்மையின் மூலம் இதை முடிவு செய்துகொள்வார்கள். மறு ஒதுக்கீடு மற்றும் எல்லைகளை நிர்ணயிக்கும் பணியைத் தொகுதி மறுவரையறை ஆணையம் செய்யும். இதை நீதிமன்றத் திலும் எதிர்கொள்ள வழியில்லை” என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





பூலாம்பாடி
கு.வரதராசன்

### தலைவரைச் சந்தித்து மகிழ்ந்தேன்!

1995-ஆம் ஆண்டு மே மாதம் 25-ஆம் தேதி, சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து மகிழ்ந்தேன். கழகத்திற்குத் தேர்தல் நிதி அளித்துப் புகைப்படம் எடுத்துக் கொண்டேன். அப்போது, கழகப் பொருளாளராக இருந்த ஆற்காடு வீராசாமி அவர்கள் அருகில் இருக்கிறார்.

**- பூலாம்பாடி கு.வரதராசன்,**
**பெரியார் விருதாளர், பெரம்பலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

**கருவூலம்**

### இந்தியாவுக்குள் திராவிடம்!

1967-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில், ‘இந்தியா வுக்குள் திராவிடம்’ என்ற திட்டம், திராவிட மொழி-பண்பாடு ஆகியவற்றின் தனித்தன்மைகளைப் பாதுகாத்திடவும் அவற்றின் சிறப்பியல்புகளை, இந்தியாவின் பிறபகுதி மக்கள் போற்றி வரவேற்று ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கும் தேவைப்படுகிறது என்பதனை கழகம் வலியுறுத்துகிறது’ என்றது. இப்போதும் அந்த இலக்கில் உழைத்துக் கொண்டிருக்கிறது கழகம்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900